2022 மார்ச் 23]

அவர்கள் அதற்கான தெளிவான வழிகாட்டுதல்களை எங்களுக்குத் தந்துகொண்டிருக்கிறார்கள். அதன்மூலமாகத்தான் மாண்புமிகு முதல்வர் அவர்களின் கனவான ‘one trillion dollar economy’ *என்பதையும் நாம் நிறைவேற்ற முடியும். அதற்காகப் பணியாற்றி வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 52, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஜெ. கோவிந்தராஜன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

52—

சுற்றுலா மாளிகை

***7379—திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எல்லாபுரம் ஒன்றியம், பெரியபாளையத்தில் தங்கும் விடுதிகள் மற்றும் சுற்றுலா மாளிகை கட்ட அரசு முன்வருமா?

முற்பகல் 11–20

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் முதலில் வணங்குகிறேன். பெரியபாளையம் அருள்மிகு பவானி அம்மன் திருக்கோயில் பகுதிகளில் அடிப்படை வசதிகள் மற்றும் அணுகு சாலை வசதிகள் கடந்த ஆண்டுகளில் சுற்றுலாத் துறையின் சார்பாக ரூ.76.22 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேலும், பெரியபாளையம் அருள்மிகு பவானி அம்மன் கோயில் பகுதியில் கூடுதல் அடிப்படை வசதிகள் தேவைப்படின், அரசு வழிகாட்டு நெறிமுறைகளின்படி உரிய துறையிடமிருந்து கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரையுடன் பெறப்படுமாயின், சுற்றுலாத் துறையின் நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஜெ. கோவிந்தராஜன் அவர்கள்.

திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மக்கள் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இளைஞரணிச் செயலாளர் அண்ணன் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய அவை முன்னவர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், எங்கள் பால்வளத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. சா.மு. நாசர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். கும்மிடிப்பூண்டி தொகுதி, எல்லாபுரம் ஒன்றியம், பெரியபாளையம் அருள்மிகு பவானி அம்மன் திருக்கோயில் மிகப் பிரசித்தி பெற்ற கோயில். ஏழை, எளியோர் வந்து தங்கி செல்லக்கூடிய கோயில். அதுமட்டுமல்லாது, கடந்த காலங்களிலே 10 வாரங்கள் மட்டுமே திருவிழா இருந்தது. தற்போது எல்லா நாட்களிலும் அங்கே பக்தர்கள் வந்து செல்லக்கூடிய நிலை இருக்கிறது. அதற்கு சரியான சாலை வசதிகள் இல்லை; தங்கும் விடுதி இல்லை. ஏற்கெனவே ஒரு சுற்றுலா மாளிகை இருந்தது. அந்த மாளிகை சிதிலமடைந்துவிட்டது. அதனையும் சீர்செய்து தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுற்றுலா மாளிகை கேட்டிருக்கிறார். சுற்றுலா மாளிகை என்று Travellers' Bungalow–வைத்தான் அவர் குறிப்பிட்டிருக்கிறார் என்று நான் நினைக்கிறேன். Travellers' Bungalow–சுற்றுலா மாளிகை என்பதில் சுற்றுலா என்கிற வார்த்தை இருந்தாலும் சுற்றுலாத் துறையின் கட்டுப்பாட்டில் அது இல்லை. அது பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. அதுமட்டுமல்லாமல், பயணியர் விடுதிகள் கேட்டிருக்கிறார். பயணிகள் விடுதிகளைப் பொறுத்தவரை அங்கு அரசிடம் நிலம் இருக்கும்பட்சத்தில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அங்கு தங்கும் விடுதிகள் கேட்டிருக்கிறார். சுற்றுலா மாளிகையும் கேட்டிருக்கிறார். தங்கும் விடுதி கட்டிக் கொடுப்பீர்களா என்று இப்போது சொல்லுங்கள்.

2022 மார்ச் 23]

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா மாளிகையைப் பொறுத்தவரையில் அது பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தச் சுற்றுலா மாளிகை மோசமாக இருக்கிறது. அதைச் சரிசெய்து கொடுக்கச் சொல்லியிருக்கிறார்கள். தங்கும் விடுதிகள் கேட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: தங்கும் விடுதிகளைப் பொறுத்தவரையில் அங்கு அரசு இடம் ஏதாவது இருக்கும்பட்சத்தில், அதை நிலப்பரிமாற்றம் செய்யும்பட்சத்தில், மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, நிதிநிலைக்கேற்ப வரும் ஆண்டுகளில் கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஜெ. கோவிந்தராஜன் அவர்கள்.

திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிலம் தேவையான அளவிற்கு இருக்கிறது. அதனைக் கொடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது. அதேநேரத்தில் இன்னொரு கேள்வியாக கும்மிடிப்பூண்டி தொகுதியில், ஆரம்பாக்கம் பகுதி, எலாவூர் பகுதி, பக்கிங்காம் கால்வாய் இருக்கக்கூடிய பகுதி, பழவேற்காடு ஏரி இருக்கக்கூடிய பகுதிகளில் சுற்றுலாத் தலம் அமைத்து படகுக் குழாம் அமைத்துத் தர வேண்டும்.

அதேபோன்று, பொன்னேரி தொகுதி, பழவேற்காடு பகுதியிலே ஆங்கிலேயர் இந்தியாவிற்கு வந்தபோது முதன்முதலாக காலடி பதித்த இடம் பழவேற்காடு பகுதி. அந்தப் பகுதியிலே சுற்றுலாத் தலமும், படகுக் குழாமும் அமைத்துத் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையைப் பரிசீலித்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், சொல்லுங்கள். பழவேற்காட்டில் கருமாரி அம்மன் கோயில் இருக்கிறது. அதில் ஏதாவது விடுதி கட்டிக் கொடுங்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் கேட்ட இடம் அருள்மிகு பவானி அம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடம். ஏற்கெனவே, அந்தக் கோப்பு 12 ஆண்டுகளாக நிலுவையில் இருந்து, புதிதாகப் பொறுப்பேற்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இருக்கின்ற இந்து சமய அறநிலையத் துறைக்கு 125 கோடி ரூபாய்க்கு அரசு அனுமதி தற்போது வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற அந்த சுற்றுலா மாளிகை 125 அறைகள் கொண்ட ஒரு பிரம்மாண்டமான தங்கும் விடுதி, அந்த 125 கோடி ரூபாயில் அடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற பணிகளுக்கும் அரசின் ஒப்புதல் பெற்று, அடுத்த மாத இறுதிக்குள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அதற்குண்டான அடிக்கல் நாட்டுகின்ற பணியை மேற்கொள்ளவிருக்கின்றார் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

53—

சமுதாயக் கூடம்

***4298—திரு. பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், காபாலிபாறை ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் சமுதாயக் கூடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?